
KAAVYA TAMIL ISSN 2277 - 9221

மலர் - 4 இதழ் - 4

விலை ₹ 100




# காவ்யா
## தமிழ்

**16 ஐப்பசி**


அக்டோபர்-டிசம்பர் 2015

கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்




கலாமுக்குக் காவியாஞ்சலி











முனைவர் க. ஆனந்தி
தமிழ்த்துறை.

# அஞ்சலி
# அப்துல்கலாம்



ஒரு சரித்திரப் புதையலாய்
ராமேஸ்வரம் கடல்முத்தை
அதன் கரையினிலே புதைத்தோம்.

அலைவாய் அரற்றலையும்
நுரைப்பூ படையலையும்
மிஞ்சியது மக்களின்
கண்ணீரும் கால்சுவடும்.

இனமில்லை மதமில்லை
எவருக்கும் சொந்தமில்லை
கட்சியில்லை மொழியில்லை
கட்டியழ மனைவியில்லை
இருந்தாலும்
புல்லழுக பூவழுக
பொழுதுதித்த நிலா அழுக
குமரிமுதல் இமயம்வரை
கல்லும் கரைந்தழுக
கண்கண்ட சாமியானாய்
கரைகண்ட ஞானியானாய்.

அக்னி சிறகுகளால்
அகிலத்தை அளந்தவனே
விண் வெளியில் ஆய்வதற்கே
விண்கலமாய்ச் சென்றாயோ.

ஊழலை ஒழிக்க விரும்பிய
உண்மைக் குடியரசு நீ
ஊக்கம் விதைக்க வந்த
உயர்ந்த முடியரசு நீ

இந்தியா இருபது வரும்
அப்போது நீ வருவாயா?

விருதுகள் துரத்திய போதும்
வீழாமல் இருந்தவன் நீ
பதவிகள் தூக்கிய போதும்
பணிவாய் உயர்ந்தவன் நீ,
கனாகாணச் சொல்லிவிட்டு
தூக்கத்தைப் பறித்துக்கொண்டாயே!

அகராதிகளைத் திருத்துவோம்
அப்துல் என்றால் அறிவியல்
கலாம் என்றால் அடக்கம்.

சுந்தரபாண்டியன்

# காவ்யா தமிழ் - 16

## அக்டோபர் - டிசம்பர் - 2015

ஆசிரியர் பேரா. சு.சண்முகசுந்தரம்
நிர்வாக ஆசிரியர் திருமதி முத்துலட்சுமி

**ஆசிரியர் குழு**

ஆ. ஏகாம்பரம், சென்னைப் பல்கலைக்கழகம்
அ.கோவிந்தராஜன், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி
திருநாகலிங்கம், புதுவைப் பல்கலைக்கழகம், சிலம்பு செல்வராசு,
கா. அய்யப்பன், செம்மொழி மத்தியத் தமிழாய்வு நிறுவனம்
தியாகராஜன், நெல்லையப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
தி. பெரியசாமி , பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
ரா. செயராமன், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்
ஜெயகிருஷ்ணன், விஜயலட்சுமி, கேரளப் பல்கலைக்கழகம்
ஒ. முத்தையா, கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்
சத்தியமூர்த்தி, செ.ரவிசங்கர், காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
தே. ஞானசேகரன், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை
அழகேசன், மனோன்மணியம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
நா. சந்திரசேகரன், அறவேந்தன், தில்லிப் பல்கலைக்கழகம்
ஈஸ்வரன் தேசியக் கல்லூரி, தேவி, உருமுதனலட்சுமி கல்லூரி
ப. கமலக்கண்ணன், சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு
திருச்செந்தூர் கதிரேசன், ஆதித்தனார் கல்லூரி
சிவ. விவேகானந்தன், வெங்கடேஸ்வரா கல்லூரி, தில்லி
தென்காசி ராஜாமுகமது, பெரியகுளம் நீலபாண்டியன்
ராஜபாளையம் நரேந்திரகுமார், சிவகாசி திலகபாமா,
மார்த்தாண்டம் மகேஷ்குமார், முத்தாலங்குறிச்சி காமராசு,
கு.கணேசன், சேலம்
பெங்களூர் சீனிவாசன், கிருஷ்ணசாமி
சிங்கப்பூர் ஜெயந்திசங்கர், சீதாலட்சுமி
இலங்கை நதிரா, குவைத் சக்கரவர்த்தி

இதழ்ப் பொறுப்பு : ம. பிரகாஷ்
இதழாக்கம் : கே.எல். லட்சுமி

16. இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம்
கோடம்பாக்கம், சென்னை - 6000 024
போன் : 044 - 23726882, 9840480232
Email : kaavyabooks@gmail.com.
Website : www.kaavyaa.com.

**சந்தா விவரம்:**

தனி இதழ் ரூ.100/- ஆண்டு சந்தா ரூ.400/-
மூன்றாண்டு சந்தா ரூ.1000/-
(சலுகை - 25% கழிவில் நூல்கள்)
ஆயுள் சந்தா ரூ.5000/-
(சலுகை - 30% கழிவில் நூல்கள்)

**விளம்பரம் விபரம்:**
முன் / பின் உள் அட்டைகள் ரூ.10000/-
பின் அட்டை ரூ.15,000/- முழுப்பக்கம் ரூ.3000/-
உள்ளே வண்ணப் பக்கம் ரூ.5000/-

தொகையை KAAVYA பெயரில் காசோலையாகவோ வரைவோலையாகவோ அல்லது பணவிடை (M.O) மூலமோ அனுப்பலாம். KAAVYA பெயரில் BANK OF INDIA, KODAMBAKKAM, CHENNAI - 24 கிளையில் 801420100003923 என்ற A/C எண்ணில் செலுத்தலாம். (IFSC: BKID 0008014).

அப்துல்கலாம் · அஞ்சலி/01
**திண்ணை:** பாகுபலியும் பாபநாசங்களும்/02
க. ஆனந்தி · அப்துல்கலாமும் ஆசிரிய வழிகாட்டிகளும் /04
**நாடகத் தமிழ்:** சிகப்புக் கண்ணாடி - ஞா. கோபி/06
**சிறுகதை:** எறும்பு · ம. அரங்கநாதன்/16
மோஹன்லால்ஜி மஹதோ - வியோகி (இந்தி) சரஸ்வதி(த)/18
வெ. இரா. நளினி · கடவுளும் மனிதனும் /21
**நெடுங்கதை:** ஜ.பிரேமலதா · கரைக்கால்பேய் /23
**கட்டுரை:** அமரன் · இனிதினிது ஹைக்கூ/36
**மதிப்புரை:** கண்ணன் · சுந்தரபாண்டியனின் அந்தி/38
மறுப்புரை: பேரா.பி.பா. · திராவிடக் கருத்தியல்/40
**சிறுகதை:** மி.ராஜு ·கிஸ்தவமும் வன்முறையும்/43
**ஏற்புரை:** மா. அரங்கநாதன்/45
**கட்டுரை:** நீல. பாண்டியன் · சிவவழிபாட்டின் மறுபக்கம்/47
கி.சங்கரநாராயணன் · தமிழ்க் காப்பு இயத்தின் வினைக் கோட்பாடு/53
பேரா. ஏ.ஆதித்தன் · குறுந்தொகை மொழிபெயர்ப்பு/58
நேர்காணல்: பேரா.சு.சண்முகசுந்தரம் · அப்துல்ரகுமான் எனும் /65
பொன்னீலன் · முத்தாலங்குறிச்சி காமராசு/68
ஞானியம் · ஞானி /73
**ஆய்வுகள்:** இரா.இராம்குமார் · நெடுநல்வாடையில் நற்கலைகள்/76
மா. விஜயலெட்சுமி · பாவேந்தரின் இரட்டைக்காப்பியத்தில் /79
வீ.அன்னபூரணி · தொல்காப்பியம் சுட்டும் எண்ணான்கு உத்திகள் /81
மு.செல்லமணி · புறநானூற்றில் வெட்சித்திணைப் பாடல்கள் /85
முனைவர் க.காந்திதாஸ் · சங்க இலக்கியத்தில் கலைஞர்கள் /89
இரா. செல்வராணி · கானவப் பெண்களின் ஆடை அணிகலன்கள்/94
சி.விஜயலெட்சுமி · சங்க இலக்கியத்தில் ஔவையாரின் பாடல்கள் /97
இரா. ஜெயஸ்ரீ · வைரமுத்து கவிதைகளில் பெண்ணிய உளவியல் /102
முனைவர் கா.மீரா · இலக்கியத்தின் வழி உணவின் மருந்துலகம் /104
வி. ஹரிவிஜயதீபா · கலித்தொகை, பரிபாடலில் உணவுப் பொருள் /107
சி. வனஜா · பெண் உடலும் ஒடுக்கப்படுதலும் /112
கூ. மெட்டில்டாடெய்சி · சோ.தர்மன் சிறுகதைகளில் தொழிலாளர்கள் /117
வீ. சித்ரா · வானூர் வட்டார நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு /120
முனைவர் த. தியாகராஜன் · சிலம்பில் அறம் /124
ஏ. மேனகா · உயிரினும் சிறந்த ஒண்பொருள் /126
தெ. இந்துமதி · நக்கண்ணையாரும் அக இலக்கியப் பாடல்களும் /129
முனைவர் கி.அய்யப்பன் · நிகண்டுகளில் திருனர் /132
இரா. மங்கையர்க்கரசி · பெண் எழுத்துக்களில் புதிய சிந்தனை /136
ச. ஆரோக்கியராஜ் · ஆற்றுப்படையில் இரவலரும் புரவலரும் /139
அ. ரேவதி · சம்ஸ்கிருத காவ்யங்கள் ஒரு பார்வை /143
மு. சுதா · மேலாண்மை பொன்னுசாமியின் சிறுகதைகள் /146
S. சிவகங்கை · பெரம்பலூர் நகர் கோபாலசுவாமி திருக்கோயில் /148
தி. சீதாராமன் · இராஜம் ஐயரின் வாழ்வும் படைப்பும் /152
திரைத்தமிழ்: த.நா.சந்திரசேகரன் மற்றும் மு. முரளி · தனி ஒருவன் /155




Scanned with CamScanner



முனைவர் க.ஆனந்தி

# அப்துல்கலாமும்

## ஆசிரிய வழிகாட்டிகளும்



ஆசிரியரின் நம்பிக்கைக்கும், தூண்டுகோலுக்கும், எதார்த்தத்திற்கும் சிறந்து விளங்கிய மாணவர்களில் டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் அவர்களும் ஒருவர். அவருடைய 'அக்னி சிறகுகள்' புத்தகத்தில் தனது பால்ய பருவத்திலிருந்து பல ஆசிரியர்களைக் குறிப்பிட்டிருந்தாலும், அவருடைய வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்திய ஆசிரியர்களைப் பற்றிய பதிவினை இக்கட்டுரையில் காண்போம்.

### பள்ளிக்கூட ஆசிரியர்:

கலாம் அவர்கள் ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் போது தன்னை ஓர் இஸ்லாமியன் என்று வெளிப்படுத்தும் தொப்பியை அணிந்து வருகிறார். முதல் வரிசையில், பூணூல் அணிந்து குடுமி வைத்திருக்கும் ராமநாத சாஸ்திரிக்கு அருகில் தான் அமர்ந்திருப்பார். இருவரும் மதம், இனம் என்ற பாகுபாடின்றி நெருங்கிய நண்பர்களாக இருக்கின்றனர். ஆசிரியப் பணியை அறப்பணியாகக் கொள்ளும் ஆசிரியர்கள் மத்தியில், கலாம் அவர்களுக்கு வகுப்பு எடுக்க வந்திருந்த ஆசிரியர்களில் ஒருவரும், அவர் நினைத்த சமூக அந்தஸ்தும் கலாமைக் கடைசி பலகையில் அமரவைத்தது. இந்நிலையில் அருகில் அமர்ந்திருக்கும் ராமநாத சாஸ்திரிக்குப் பிரிவு என்பது பெரிய விளைவை ஏற்படுத்தியது.

தனது தந்தையிடம் நடந்ததைக் கூறுகிறார் ராமநாத சாஸ்திரி. அவரது தந்தை இன்னொரு ஆசிரியர் என்பதை நிரூபிக்கின்றார். குழந்தைகள் உள்ளத்தில் 'பசுமரத்தாணி போல்' பதியும் சில பழக்கவழக்கங்களில் இதுவும் ஒன்றாக அமைந்து விடக்கூடாது என்று நினைத்த அந்தத் தந்தை, ஆசிரியரை அழைத்துக் கண்டிக்கிறார். குழந்தைகள் மனதில் சமூக ஏற்றத் தாழ்வு, சமய வேறுபாடு என்ற நஞ்சைப் புகுத்தாதீ என்றார். இங்ஙனம் ராமநாத சாஸ்திரியின் தந்தை ஒரு சிறந்த ஆசிரியராக கலாம் அவர்களின் மனதில் பதிந்து விட்டார். ஏனெனில் அவருடைய பள்ளிக்கூட ஆசிரியர் வருத்தம் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், தன்னை மாற்றிக் கொள்ளவும் முற்பட்டார்.

### விஞ்ஞான ஆசிரியர்:

கலாம் அவர்களின் விஞ்ஞான ஆசிரியர் சிவசுப்பிரமணிய ஐயர். இவர் ஆசாரமான பிராமணராக இருந்தாலும், வித்தியாசமானவர், புரட்சிகரமான சிந்தனை கொண்டவர். ஆனால் இவருடைய மனைவி பழைய நடைமுறைகளை மாற்றிக் கொள்ள விரும்பாதவர். இவருடைய மனைவியைப் போன்று பலதரப்பட்ட பின்னணியைக் கொண்ட மக்கள் வாழும் சமுதாயமாக விளங்கியது இராமேஸ்வரம். இந்த நிலையிலிருந்து மாறி மக்கள் இணக்கமாக வாழவேண்டும் என்பதற்காக சமூகத் தடைகளைத் தகர்த்தெறியும் , தீரமான செயலில் ஈடுபட்டவர் சிவசுப்பிரமணிய ஐயர். இவர் கலாம் அவர்களுடன் அதிக நேரம் செலவழித்தார். "பெரிய நகரங்களில் உள்ள மெத்தப் படித்தவர்களுக்குச் சமமாக நீ உயர வேண்டும்" எனவும் கூறுவார். ஒரு நாள் சாப்பிடுவதற்காகத் தமது வீட்டிற்கு கலாமை அழைத்துச் செல்கிறார். சுத்தபத்தம் நிறைந்த சமையலறையில் ஒரு முஸ்லீம் பையன் சாப்பிடுவதா? என்று அவரது மனைவி அதிர்ந்து போனார். கலாமுக்கு உணவு பரிமாறக் கூட மறுத்து விட்டார். சிவசுப்பிரமணிய ஐயர், எதுவுமே நடக்காதது போல் சாதாரணமாக இருந்தார். அவரே கலாமுக்கு உணவும் பரிமாறினார். மிகவும் நாகரீகமாகச் சாப்பிட்டு எழுந்தார் கலாம். மீண்டும் அடுத்த வாரக் கடைசியிலும் சாப்பிட வருமாறு அழைக்கிறார் ஆசிரியர். தயங்கி நின்ற கலாமுக்கு "இதற்கெல்லாம் மனம் தளரக் கூடாது. ஒரு அமைப்பு முறையை மாற்ற வேண்டும் என்று தீர்மானித்த பிறகு இப்படிப்பட்ட பிரச்சினைகளை எல்லாம் எதிர் கொண்டாக வேண்டும்." என்று கூறினார்.

ஒரு ஆசிரியர் சாதாரண மாணவனுக்காகத் தன்னுடைய சராசரியான, எதார்த்தங்கள் நிறைந்த வாழ்க்கையை உதாரணமாகக் காட்டியதை எண்ணி கலாம் வியந்து நின்றார். அவருடைய ஆழ்மனதில் இது பதிந்து நின்றது. காரணம், மீண்டும் ஆசிரியரின் இல்லத்திற்கு சென்ற போது ஆசிரியரின் மனைவியே கலாமுக்கு உணவு பரிமாறினார்கள்.

தமிழ்த்துறைப் பேராசிரியை, பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

## நிரந்தர வழிகாட்டியாக விளங்கிய ஆசிரியர்:

ராமநாதபுரம், ஸ்வார்ட்ஸ் உயர்நிலைப் பள்ளியில் பதினைந்து வயதுப் பருவம் நிறைந்த கலாமுக்கு ஆதார்ஷனமான வழிகாட்டியாக இருந்தவர் ஆசிரியர் அய்யாதுரை சாலமன் அவர்கள். ஒளிவு மறைவில்லாத நல்ல ஒரு அணுகுமுறையாலும், இதமான செயல்பாடுகளினாலும், மாணவர்களுக்குத் தனி ஒரு ஈடுபாட்டினை வரவழைத்து தனது வகுப்பினை நடத்திச் செல்பவர் அய்யாதுரை சாலமன் அவர்கள். அவருடைய கூற்று வாலிப வயதினருக்குப் பொருந்துவனவாகவும் சிந்திக்கக் கூடியனவாகவும் அமைந்திருக்கின்றது. என்னவெனில் "திறமைசாலியான ஒரு ஆசிரியரிடமிருந்து ஒரு மோசமான மாணவன் கற்றுக் கொள்வதை விட, ஒரு மோசமான ஆசிரியரிடமிருந்து ஒரு நல்ல மாணவனால் அதிகம் கற்றுக் கொள்ள முடியும்" என்பது தான் அக்கூற்று.

வாலிப வயது நிரம்பிய ஆண்பிள்ளைக்கும் சரி, பெண்பிள்ளைக்கும் சரி அறிவுரை நிறைந்த வார்த்தைகள் தான் பல மாற்றங்களை அவர்களுக்குள் ஏற்படுத்தும். ஒன்று, வாழ்வின் இலட்சியங்களை அடைய வைக்கும். மற்றொன்று அவர்களைப் பக்குவப்படுத்தும். இத்தன்மை கலாமின் வாழ்வில் சரியான தருணத்தில் கிட்டியுள்ளது என்றே கூற வேண்டும். ஏனெனில், தமது சொந்த வாழ்க்கையில் நிகழும் சம்பவங்களைத் தாம் விரும்பியபடி அமைத்துக் கொள்ள முடியும் என்பதை கலாம் அவர்களின் மனதில் ஆழமாக விதைத்துள்ளார் அய்யாதுரை சாலமன் அவர்கள். "வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டும், நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்றால் ஆசை, நம்பிக்கை, எதிர்பார்ப்பு என்ற மூன்று வலுவான சக்திகளைப் புரிந்து கொண்டு அதில் கைதேர்ந்தவராகி விடவேண்டும்" என்னும் அவருடைய, கூற்று, கலாம் அவர்களுக்கு மிகப்பெரிய உத்வேகத்தை அளித்தது. வாழ்க்கையின் அடுத்த நிலையை எட்ட இதுவே அவருக்குக் கிடைத்த தாரக மந்திரமாகவும் விளங்கியது. ஏனெனில், தான் நினைத்து நிறைவேற வேண்டும் என்றால், அதற்கு தீவிரமாக ஆசைப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது அது நிச்சயமாக நடந்தே தீரும் என்று நம்ப வேண்டும் என்பது போன்ற எண்ணங்களை விதைத்தவர் அய்யாதுரை சாலமன் அவர்கள். நம்பிக்கை வைத்தால் உன் தலைவிதியை உன்னால் மாற்றி அமைக்க முடியும் என்று கூறியதோடு ஆகாயத்தில் பறந்த ராமேஸ்வரத்தின் முதல்குழந்தை கலாம் என்ற பெருமைக்குக் காரணமாக இருந்தவரும் இவரே.

## வடிவமைப்பு ஆசிரியர்:

தாழ்வாகப் பறந்து தாக்கும் ஒரு போர் விமானத்தை வடிவமைக்கும் திட்டப்பணி கலாம் அவர்களுக்கும் அவருடைய சக மாணவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. ஏரோ டைனமிக் டிஸைன் வரையும் பொறுப்பை எடுத்துக் கொண்ட கலாம் அவர்களுக்கு அப்போது, எம்.ஐ.டி.யின் இயக்குநராக இருந்த பேராசியர் ஸ்ரீனிவாசன் தான் வடிவமைப்பு ஆசிரியராக இருந்தவர். ஒரு நாள், கலாமின் திட்டத்தினை மதிப்பீடு செய்ய வந்த ஸ்ரீனிவாசன் அவர்கள், திட்டம் நம்பிக்கை தரவில்லை, ஏமாற்றம் அளிக்கிறது என்று அவரது முடிவைச் சொன்னார். தாமதத்திற்கான பல காரணங்களை எடுத்துச் சொல்லியும் சமாதானம் அடையாது போனார் ஸ்ரீனிவாசன். ஒரு மாத கால அவகாசம் தரும்படி கேட்ட கலாம் அவர்களுக்கு மூன்று நாட்களே தந்தார்.

**"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு" (குறள்:467)**

என்னும் குறளுக்கு இணங்க, அன்று இரவு முழுவதும் வரைபலகை முன் உட்கார்ந்து இரவு உணவைக் கூட பொருட்படுத்தாது செயலில் ஈடுபட்டார். மறுநாள் காலை ஒரு மணி நேர இடைவெளியினை எடுத்துக் கொண்டு தன்னை மீண்டும் சுறுசுறுப்பாக்கினார் கலாம் அவர்கள். செயலில் முழு மூச்சோடு ஈடுபட்டு நிறைவு செய்தார். தொலைவில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீனிவாசன் அவர்கள் கலாமின் முன்னேற்றத்தைக் காண அவருடைய அறைக்குள் நுழைந்தார். கலாமின் வேலையைப் பார்த்துவிட்டு அவரை ஆரத் தழுவிக் கொண்டார். முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டவும் செய்தார்.

ஒரு ஆசிரியரின் கடமை என்னவெனில் சரியான நேரத்தில் மாணவர்களைத் தட்டிக்கொடுத்து புகழ்வது தான். புகழ்ச்சிதான் மாணவர்களை உயர்வடையச் செய்யும். அந்தவகையில் கலாம் அவர்களுக்கும் புகழ் கிடைத்தது.

**பேராசிரியர் ஸ்பாண்டர்:**

எம்.ஐ.டி.யில் படிப்பு முடிந்தவுடன் பிரிவு உபசார நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நிகழ்வின் ஒன்றாக மாணவர்கள் அனைவரும் தங்களுடைய ஆசிரியர்களோடு புகைப்படம் எடுத்துக்கொள்ள தயாரானார்கள். அப்போது, மூன்று வரிசையாக மாணவர்கள் நின்று கொண்டிருந்தனர். முதல் வரிசையில் அமர்ந்திருந்த பேராசிரியர் ஸ்பாண்டர் திடீரென்று எழுந்தார். மூன்றாவது வரிசையில் நின்றிருந்த கலாமை அழைத்து தன் அருகில் அமரும்படி கேட்டுக் கொண்டார். கலாம் ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனார். அதற்கு ஸ்பாண்டர் கூறியதாவது "என்னுடைய தலைசிறந்த மாணவன் நீங்கள், எதிர்காலத்தில் உங்களுடைய ஆசிரியர்களுக்குப் புகழ் சேர்ப்பதற்குக் கடும் உழைப்பு உங்களுக்குத் துணைநிற்கும்" என்றார். அந்தப் பாராட்டு வார்த்தைகள் கலாமுக்கு மேலும் வலிமை சேர்த்தது.


ஒரு ஆசிரியரால் மாணவனுக்குக் கிடைக்கும் பெருமையும், அதே மாணவனால் ஆசிரியருக்குக் கிடைக்கும் பெருமையும் நிகரில்லாத ஒன்று. அத்தகைய ஒரு தன்மைதான் நாம் மேற்கண்ட செய்தியாகும்.

●



Scanned with CamScanner

KAAVYA TAMIL (QUARTERLY) July - Sep., 2015
Regd. No. TNTAM2012/43610




KAAVYA TAMIL ISSN 2277 - 9221

Scanned with CamScanner